ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2135/63 - 2019 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2019.08.09
2135/63 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

எனது இல. : GCF/ATH/CB/22/LR.
காணி மற்றும் பாரா. மறு. அமைச் இல. : 03J/92/LRB/133.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1993.07.12 ஆந் திகதிய 775/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 100 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை மூலம் அரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கொ : 7775 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு இல. 1, 4, 5 இல் உரித்துக் கோரல் முன்வைக்கப்படாததுமான கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் பகுதிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை, அக் காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு, காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ், குறித்த வழக்கு இலக்கத்தின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

சீ. டபிள்யூ. அபேசூரிய,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக்
கட்டுப்படுத்தல், சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி
எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய
2019, ஒகத்து 07.

#### அட்டவணை

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | மேல் மாகாணம் ; |
| மாவட்டம் | : | கொழும்பு ; |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | கொழும்பு ; |
| கிராமம் | : | புளூமெண்டல் ; |
| காணியின் பெயர் | : | சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் வரி மதிப்பீட்டு இல. 579/2 ஐ உடைய காணியின் ஒரு பகுதி ; |
| வரைபட இல. | : | ஆ. வ. இல. கொ : 7775 ; |
| துண்டு இல. | : | துண்டு இல. 1, 4, 5 (உரித்துக் கோரல் முன்வைக்கப்படாத பகுதிகள்) ; |
| விஸ்தீரணம் | : | 213.58 பர்ச்சஸ் ; |
| மாவட்ட நீதிமன்றம் | : | கொழும்பு ; |
| வழக்கு இல. | : | DLA 135/18 ; |
| வைப்புச்செய்யப்பட்ட தொகை | : | ரூ. 2,15,68,374.60 (ரூபா இரண்டு கோடியே பதினைந்து இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து முந்நூற்றி எழுபத்தி நான்கு ரூபா சதம் அறுபது) |

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துக் கோருவோர் தத்தமது உரித்துரிமையை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திடம் முன்வைத்து தமக்குரிய நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளுமாறு பொது மக்களை தொடர்ந்தும் கேட்டுக் கொள்கின்றேன்.

8 - 902

G30711 - 26 (2019/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.